- பிரதம அமைச்சர் நாட்டின் உண்மையான தலைவராவார். அவர் நாட்டின் முக்கிய செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
- சர்வதேச மாநாடுகளான காமன்வெல்த், அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, சார்க் நாடுகளின் மாநாடு ஆகியவற்றில் இந்திய நாட்டின் பிரதிநிதியாகப் பிரதமர் பங்கு கொள்கிறார்.

- The Prime Minister is the leader of the nation and chief spokesperson of the country.
- As the leader of the nation, the Prime Minister represents our nation at all international conferences like the commonwealth, summit of the non aligned nations and SAARC nations.

## அமைச்சரவைக் குழு

தேர்தலுக்குப் பின்னர் பிரதம அமைச்சரின் ஆலோசனையின்படி குடியரசுத் தலைவர் அமைச்சரவையை நியமிக்கிறார். ஒட்டு மொத்த மக்களவை உறுப்பினர்களில் 15% மட்டுமே அமைச்சரவை உறுப்பினர்களாக (பிரதம அமைச்சர் உட்பட) இருத்தல் வேண்டும் என இந்திய அரசியலமைப்புச் சட்டம் வரையறுத்துள்ளது.

## நடுவண் அமைச்சர்களின் வகைகள்

நடுவண் அமைச்சர்கள் மூன்று தரநிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

1. காபினெட் (அ) ஆட்சிக்குழு அமைச்சர்கள்
2. இராசாங்க அமைச்சர்கள்
3. இணை அமைச்சர்கள்

## Council of Ministers

After the elections, the President of India, on the advice of the Prime Minister, appoints the council of ministers. The Constitution of India restricts the number of the Council of Ministers including the Prime Minister to 15% of the total members of the Lok Sabha.

## Categories of the Ministers

The ministers are classified under three ranks

(i) Cabinet Ministers

(ii) Ministers of State

(iii) Deputy Ministers.

| | |
|---|---|
| **காபினெட் அமைச்சர்கள்**<br>நிர்வாகத்தின் மையக் கருவை உருவாக்கும் மூத்த அமைச்சர்களின் முறைசாரா அமைப்பே காபினெட் ஆகும். காபினெட் அரசாங்கத்தின் பாதுகாப்பு, நிதி, வெளியுறவுக் கொள்கைகள், உள்துறை ஆகியவற்றின் முக்கிய முடிவுகளை எடுக்கிறது.<br>**இராசாங்க அமைச்சர்கள்**<br>அமைச்சரவை குழுவின் இரண்டாவது வகையினரே இராசாங்க அமைச்சர்கள் ஆவர். அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளின் பொறுப்பு அமைச்சராக செயல்படுகின்றனர். ஆனால் அழைப்பு விடுத்தால் மட்டுமே இவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.<br>**இணை அமைச்சர்கள்**<br>அமைச்சரவையில் மூன்றாவதாக, இணை அமைச்சர்கள் உள்ளனர். காபினெட் அமைச்சர்கள் (அ) இராசாங்க அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளைச் செயலாற்றுவதில் இவர்கள் உதவி புரிகின்றனர். | **Cabinet Ministers**<br>The Cabinet is an informal body of senior ministers who form the nucleus of administration. Important decisions of the government are taken by the Cabinet, such as defense, finance, external affairs and home.<br>**Ministers of State**<br>These ministers belong to the second category of ministers in the council. They are also in charge of ministries or departments but they do not participate in the meetings of the cabinet unless invited to do so.<br>**Deputy Ministers**<br>They are the lowest ranked ministers in the cabinet. They assist either the Ministers of Cabinet or State in the performance of the duties entrusted to them. |
| பிரதமர் அலுவலகம், PMO | PM Office |
| **பிரதமர் செயலகம்**<br>• பிரதமர் அலுவலகம் 1977ஆம் ஆண்டு வரை பிரதமர் செயலகமாக (Prime Minister's Secretariat)ச் செயல்பட்டு வந்தது. | Prime Minister's Secretariat<br>• The Prime Minister's Office functioned as the Prime Minister's Secretariat until 1977. |

| | |
|---|---|
| • 1946 செப்டம்பர் மாதம் துவக்கப்பட்ட இந்த செயலகம் இரண்டு முக்கியப் பணிகளைச் செய்து வந்தது:<br>1. பிரதமர், குடியரசுத் தலைவர், அமைச்சர்கள், ஆளுநர்கள், முதலமைச்சர்கள், வெளி நாட்டு அரசாங்கப் பிரதிநிதிகள் போன்றோருடன் தொடர்பு கொள்ள உதவி செய்தது.<br>2. பொது மக்களிடமிருந்து பிரதமருக்கு வரும் விண்ணப்பங்களையும், வேண்டுகோள்களையும் திறமையாகக் கையாள்வதற்கு உதவிற்று.<br><br>**பிரதமர் அலுவலகம்**<br>• காலப் போக்கில் பிரதமரின் அதிகாரங்களும், பொறுப்புகளும், நடவடிக்கைகளும் அதிகரிக்கவே செயலர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.<br>• 1977ஆம் ஆண்டு மொரார்ஜி தேசாய் தலைமையில் ஜனதா அரசாங்கம் (Janata Government) அமைக்கப்பட்டவுடன் பிரதமர் செயலகத்தின் அதிகாரங்களும், பணிகளும் வெகுவாகக் குறைக்கப்பட்டன.<br>• அது மட்டுமல்ல; பிரதமர் செயலகம் பிரதமர் அலுவலகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.<br>• பின்னர் வந்த பிரதமர்களான இந்திரா காந்தியும், இராஜீவ் காந்தியும் பிரதமர் அலுவலகம் என்ற பெயரை மாற்றாமல் பறிக்கப்பட்ட அதிகாரங் களை மீட்டு மேலும் பலப்படுத்தினர்!<br>• பிரதமருக்கு உதவுகிறது.<br>• பிரதமருக்கு அவர்தம் செயலக உதவிகளையும் முக்கியமான ஆலோசனைகளையும் வழங்குகிறது.<br>• மேல் மட்ட அளவிலான இந்திய அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளை எடுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.<br>• அரசியலமைப்பு சாரா அமைப்பாகும்.<br>• இந்திய அரசாங்கத்தின் துறைக்கான அந்தஸ்துகொண்டுள்ளது.<br>• 1947 முதல் செயல்பாட்டிற்கு வந்தது.<br>• 1977 வரையிலும் பிரதமரின் செயலகம் என அழைக்கப்பட்டது.<br>• மொரார்ஜி தேசாய் அமைச்சரவையால் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. | • This Secretariat, established in September 1946, performed two main functions:<br>1. It facilitated communication with the Prime Minister, the President, ministers, governors, chief ministers, and representatives of foreign governments.<br>2. It assisted in efficiently handling applications and requests received by the Prime Minister from the general public.<br><br>Prime Minister's Office<br>• Over time, as the Prime Minister's powers, responsibilities, and activities increased, the number of secretaries also increased.<br>• When the Janata Government, led by Morarji Desai, was formed in 1977, the powers and functions of the Prime Minister's Secretariat were significantly reduced.<br>• Moreover, the Prime Minister's Secretariat was renamed the Prime Minister's Office.<br>• Subsequent Prime Ministers, Indira Gandhi and Rajiv Gandhi, retained the name Prime Minister's Office but restored the curtailed powers and further strengthened the office!<br><br>• Assists Prime Minister.<br>• Provides secretariat assistance & crucial advice to PM.<br>• Plays important role in decision making at top level of Government of India.<br>• Extra constitutional body.<br>• Has the status of a department of the Government of India.<br>• Came into existence in 1947.<br>• Till 1977 it was called Prime Minister's Secretariat (PMS).<br>• Renamed by the Ministry of Morarji Desai. |

| | |
|---|---|
| **பிரதமர் அலுவலகத்தின் பணிகள்:**<br>1. மத்திய அமைச்சகங்கள், துறைகள் .மற்றும் மாநில அரசாங்கங்கள் இவற்றுடன் தொடர்பு கொண்டு பிரதமர் ஒரு அரசாங்கத்தின் தலைவராகத் தனது பணிகளை நிறைவேற்றிட உதவுகிறது.<br><br>2. நிதி ஆயோக் மற்றும் தேசிய வளர்ச்சியை இவற்றின் தலைவராகத் தனது பொறுப்புகளை நிறைவேற்றிட பிரதமருக்கு இவ்வலுவலகம் உதவுகிறது.<br><br>3. பத்திரிக்கைத்துறை மற்றும் பொதுமக்களுடன் நல்ல மக்கட் தொடர்பைப் பேணிட பிரதமருக்கு உதவி புரிகிறது.<br><br>4. பிரதமரின் கீழ் வரும் அனைத்து அலுவலல் நடவடிக்கை விதிகள் மற்றும் விவகாரங்களைக் கவனித்துக் கொள்கிறது.<br><br>5. பிரதமரின் ஆணைக்காக முன் வைக்கப்படும் விவகாரங்கள்/வழக்குகளில் விதிகள் அடிப்படையில் உதவி புரிகிறது.<br><br>6. குடியரசுத் தலைவர் ஆளுநர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதரக அலுவலகங்களுடன் நல்லுறவைப் பேணுகிறது.<br><br>7. பிரதமரின் 'சிந்தனைக் களஞ்சியமாகச்' செயல்படுகிறது. எந்தவொரு அமைச்சருக்கும் அல்லது துறைக்கும் ஒதுக்கீடு செய்யப்படாத விவகாரங்களைக் கவனித்துக் கொள்கிறது.<br><br>8. எனினும் பிரதமர் தலைவராக உள்ள கேபினட் தொடர்பான விவகாரங்களுக்கு பொறுப்பு ஏற்பதில்லை. கேபினட் தொடர்பான விவகாரங்களைக் கையாளுவதற்கு கேபினட் செயலகம் தனியே உள்ளது. இதுவும் பிரதமரின் வழிகாட்டுத அடிப்படையிலேயே செயல்படுகிறது.<br><br>9. ஒரு அரசாங்கத்தின் தலைவராகப் பிரதமர் தனது அனைத்துப் பொறுப்புகளையும் நிறைவேற்றிட உதவுகிறது. | Functions of Prime Minister's Office<br><br>1. Assists the prime minister in his overall responsibilities as head of the government, in maintaining communication with the central ministries/departments and the state governments.<br><br>2. Helps the prime minister in his responsibilities as chairman of the Niti Aayog and the National Development Council.<br><br>3. Looks after the public relations of the prime minister like contact with the press and general public.<br><br>4. Deals with all references, which under the Rules of Business have to come to the Prime Minister.<br><br>5. Provides assistance to the Prime Minister in the examination of cases submitted to him for orders under prescribed rules.<br><br>6. Maintains harmonious relationship with the President, Governors and foreign representatives in the country.<br><br>7. Acts as the 'think tank' of the Prime Minister. It deals with all such subjects that are not allotted to any department/ministry.<br><br>8. It is not concerned with the responsibility of the Prime Minister as the chairman of the union cabinet. The cabinet cases are directly dealt by the cabinet secretariat, which also functions under the direction of the prime minister.<br><br>9. Assists PM, in his overall responsibilities as head of government. |

| அமைச்சரவை (Council of Ministers) | Council of Ministers |
|---|---|
| • இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 74ஆவது சரத்தில் பிரதமரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை என்று குறிப்பிடப் பட்டுள்ளது.<br>• இந்த சரத்து அமைச்சரவையின் தகுநிலை (Status)யைத் தெளிவுபடுத்துகிறது.<br>• அமைச்சரவை ஆட்சி உரிமை பெற்றது.<br>• இதன் ஆலோசனையைக் குடியரசுத் தலைவர் நிராகரிக்க முடியாது.<br>• நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் அமைச்சரவை செயல்படும்!<br>• சுருங்கக் கூறின் அமைச்சரவையே நாடாளுமன்ற அரசியல் அமைப்பு முறையின் முதுகெலும்பாகும். | • Article 74 of the Indian Constitution mentions a Council of Ministers headed by the Prime Minister.<br>• This article clarifies the status of the Council of Ministers.<br>• The Council of Ministers is vested with governing authority.<br>• The President cannot reject its advice.<br>• The Council of Ministers continues to function even if Parliament is dissolved!<br>• In short, the Council of Ministers is the backbone of the parliamentary system of government. |
| **நியமனம்** | Appointment |
| • அரசியல் அமைப்புச் சட்டத்தின் 75ஆவது சரத்து அமைச்சர் களின் நியமனம், பதவி ஏற்பு, பொறுப்பு, ஊதியம், சலுகைகள் பற்றிக் கூறுகிறது.<br>• பிரதமர் தெரிவு செய்யும் அமைச்சர்களைத்தான் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.<br>• பொதுவாக அமைச்சராக நியமிக்கப் படுபவர் நாடாளுமன்றத்தின் ஒரு அவையின் உறுப்பினராக இருக்க வேண்டும். மக்களவை உறுப்பினராகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.<br>• நாடாளுமன்ற அவை உறுப்பினர் இல்லா விட்டாலும் பிரதமர் ஒருவரை அமைச்சராக நியமிக்கலாம்! அப்படி நியமிக்கப்படும் அமைச்சர் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங் களுக்குள் நாடாளுமன்ற அவைகளில் ஒன்றில் உறுப்பினராகி விட வேண்டும். இல்லையேல் நியமன அமைச்சரின் பதவி பறிபோய் விடும்!<br>• அமைச்சர் எந்த அவையில் உறுப்பினராகின்றாரோ அந்த அவையில்தான் அவருக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு.<br>• எனினும் அவர் மற்றொரு அவையின் விவாதங்களிலும் நடவடிக்கைகளிலும் பங்கேற்கலாம். | • Article 75 of the Constitution deals with the appointment, oath of office, responsibilities, salaries, and allowances of ministers.<br>• The President appoints only those ministers who are chosen by the Prime Minister.<br>• Generally, a person appointed as a minister must be a member of one of the Houses of Parliament. It is not necessary that they be a member of the Lok Sabha (House of the People).<br>• Even if a person is not a member of Parliament, the Prime Minister can appoint them as a minister! Such a minister must become a member of one of the Houses of Parliament within 6 months of their appointment. Otherwise, the appointed minister will lose their position!<br>• A minister has the right to vote only in the House of which they are a member.<br>• However, they can participate in the debates and proceedings of the other House. |

| | |
|---|---|
| **பதவி ஏற்பு**<br><br>• பிரதமரால் நியமிக்கப்படும் அமைச்சர் பதவிப் பொறுப்பு ஏற்பதற்கு முன் பதவிப் பிரமாணமும் இரகசியப் பாதுகாப்புப் பிரமாணமும் (Oaths of office and secracy) எடுத்துக் கொள்ள வைக்கிறார். அதாவது குடியரசுத் தலைவரின் சொல் வழி அவருக்கு வேண்டும்.<br>• குடியரசுத் தலைவர் இப்பிரமாணங்களை செய்து முன் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளாத அமைச்சர் பதவிப் பொறுப்பேற்க இயலாது. | Taking Office<br><br>• Before assuming office, ministers appointed by the Prime Minister are required to take the oath of office and the oath of secrecy. That is, they must act according to the President's instructions.<br>• The President administers these oaths, and a minister cannot assume office without first taking the oath of office. |
| பதவிப் பொறுப்பு<br><br>இருவகைப் பொறுப்புகள்<br><br>• அமைச்சர்களுக்கு இருவகைப் பொறுப்புகள் உண்டு<br>• 1. தனிப் பொறுப்பு (Individual Responsibility).<br>• 2. கூட்டுப் பொறுப்பு (Collective Responsibility).<br>• இவ்விருவகை பொருப்புகளுக்கும் சரத்து 75இல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.<br><br>**1.தனிப் பொறுப்பு**<br>• ஒவ்வொரு அமைச்சரும் பொது மக்களின் பிரதிநிதி.<br>• பொதுநல ஊழியர் (Public Servant).<br>• இவர் ஒரு தொழில்வழி அரசியல்வாதி (Professional Politician).<br>• அரசியல் அறிவும் அனுபவமும் பெற்றவர்.<br>• திறத் தொழிலாளர். அதாவது அரசியலே இவரது முழு நேரத் தொழில். இவரிடமிருந்து மக்கள் நிறைய எதிர்பார்க்கின்றனர்.<br>• மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதே இவரது கடமை; பொறுப்பு.<br>• பிரதமர் ஒவ்வொரு அமைச்சருக்கும் அவரது அறிவு, ஆற்றல், அனுபவம் ஆகியவற்றுக்கேற்ப இலாகா அல்லது இலாக்காக்களை ஒதுக்கிக் கொடுக்கிறார். | Official Responsibilities<br><br>Two Types of Responsibilities<br><br>• Ministers have two types of responsibilities:<br>• 1. Individual Responsibility<br>• 2. Collective Responsibility<br>• These two types of responsibilities are clearly specified in Article 75.<br><br>1. Individual Responsibility<br>• Every minister is a representative of the public.<br>• A public servant.<br>• He is a professional politician.<br>• He possesses political knowledge and experience.<br>• A skilled professional; that is, politics is his full-time profession. The people expect a lot from him.<br>• Fulfilling the needs of the people is his duty and responsibility.<br>• The Prime Minister allocates portfolios or departments to each minister according to their knowledge, ability, and experience. |

| | |
|---|---|
| • ஒவ்வொரு அமைச்சரும் அவருக்கு ஒதுக்கப்பட்ட இலாகாவுக்குரிய கொள்கை முடிவெடுக்கிறார். அந்த முடிவுக்கு அவர் முழுப் பொறுப்பு ஏற்கிறார். இக்கொள்கை முடிவு வாய்வழியாக இல்லாமல் எழுத்து பூர்வமாகவும் வெளிப்படை யாகவும் இருக்க வேண்டும்.<br>• அமைச்சர் அவரது துறைச் செயலரைக் கலந்து ஆலோசித்த பின் முடிவெடுக்கிறார். இவ்வாறு முடிவெடுக்கும் போது அமைச்சருக்கு மனத் தெளிவும், இம்முடிவால் ஏற்பட கூடிய விளைவுகள் பற்றிய தொலை நோக்கும் இருக்க வேண்டியது இன்றியமையாதது.<br>• அவசரப்பட்டு முடிவெடுத்து விட்டு நிதானமாக வருத்தப்படக் கூடாது.<br>• சரியான புரிதல் இல்லாத, மன ஊசலுடைய திறமையற்ற அமைச்சர் தனிப் பொறுப்புக்கு அருகதையற்றவர் என்று குறிப்பிட்டுள்ளார் ஹெர்பர்ட் மோரிசன் (Herbert Morrison | • Each minister makes policy decisions for the department assigned to him. He takes full responsibility for that decision. This policy decision should be in writing and transparent, not merely verbal.<br>• The minister makes decisions after consulting with his departmental secretary. When making such decisions, it is essential that the minister has mental clarity and foresight regarding the consequences of the decision.<br>• He should not make hasty decisions and then regret them later.<br>• Herbert Morrison has stated that an incompetent minister lacking proper understanding and having wavering thoughts is unworthy of individual responsibility. |
| கூட்டுப் பொறுப்பு<br>• அரசியல் அமைப்புச் சட்டத்தின் 75ஆவது சரத்து அமைச்சர் களின் கூட்டுப் பொறுப்பு பற்றி மிகத் தெளிவாகக் கூறியுள்ளது.<br>• இக்கூட்டுப் பொறுப்பு நாடாளுமன்ற அரசியல் அமைப்பு மற்றும் அரசாங்க முறையின் அடிப்படையாகும்.<br>• ஒவ்வொரு அமைச்சரும் அவரது இலாகா அல்லது இலாக்காக்களுக்குத் தனிப் பொறுப்பு ஏற்கின்றார்.<br>• எனினும் அமைச்சர்கள் அனைவரும் நாடாளுமன்ற மக்களவைக்குக் கூட்டுப் பொறுப்புடையவர்கள்.<br>• அதாவது அமைச்சர்கள் செய்தக்க செய்தமைக்கும் செய்தக்க செய்யாமைக்கும் கூட்டுப் பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில் அமைச்சர்கள் ஒரு அணியாக (Team) செயல்படுகிறார்கள்; செயல்பட வேண்டும். ஒன்றாக நீந்த வேண்டும்; நீந்தினாலும் மூழ்கினாலும் அணியாகச் செயல்பட வேண்டும்!<br>• மக்களவையில் அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் (No-Confidence Motion) நிறைவேற்றப்பட்டால் பிரதமரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகியதாக கருதப்படுவர்.<br>• ஒவ்வொரு அமைச்சரும் தனித்தனியே பதவி விலக வேண்டியதில்லை. | Collective Responsibility<br>• Article 75 of the Constitution clearly states the principle of collective responsibility of the Ministers.<br>• This collective responsibility is the foundation of the parliamentary system of government.<br>• Each minister is individually responsible for his or her department(s).<br>• However, all ministers are collectively responsible to the Lok Sabha (House of the People) of the Parliament.<br>• That is, ministers must take collective responsibility for what they have done and what they have failed to do. This is because ministers act as a team; they must act as a team. They must swim together; whether they swim or sink, they must act as a team!<br>• If a no-confidence motion is passed against the Cabinet in the Lok Sabha, all members of the Cabinet, headed by the Prime Minister, are deemed to have resigned.<br>• Individual ministers do not need to resign separately. |

| | |
|---|---|
| • பதவி விலகிய அமைச்சரவையின் ஆலோசனை குடியரசுத் தலைவரை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது!<br>• கூட்டுப் பொறுப்பு என்றால் என்ன? கூட்டுப் பொறுப்பு என்பது அமைச்சரவைக் குழு (Cabinet) எடுக்கும் முடிவுகளுக்குக் கட்டுப்படுவது என்று பொருள். அமைச்சரவைக் குழுக் கூட்ட விவாதத்தின்போது அமைச்சர்களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம். இக்கருத்து வேறுபாடுகளை அவர்கள் வலியுறுத்தலாம். இருப்பினும் அமைச்சரவைக் குழு விவாதத்துக்குப் பின் முடிவெடுத்து விட்டால் அந்த முடிவை அமைச்சர்கள் நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும்.<br>• கருத்து வேறுபாடுகளை இரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது. அது மட்டுமல்ல. அமைச்சரவைக் குழு முடிவுகளை நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் முழு மூச்சுடன் ஆதரிக்க வேண்டும். போக்கிலும் எழுத்திலும் வெளிப்படுத்த வேண்டும்; பிரதிபலிக்க வேண்டும்.<br>• அமைச்சரவைக் குழு முடிவெடுத்த பின்னரும் அமைச்சருக்கு அந்த முடிவில் உடன்பாடில்லையாயின் அவர் பதவியிலிருந்து விலகி விட வேண்டும். பதவியில் இருந்து கொண்டே அமைச்சரவைக் குழு முடிவுகளை விமரிசிக்கவோ அல்லது எதிர்த்துப் பேசவோகருத்துக்களைக் கூறவோ கூடாது.<br>• 1953இல் அமைச்சரவைக் குழு இந்து சட்ட மசோதா (Hindu Code Bill) பற்றி எடுத்த முடிவை ஏற்றுக் கொள்ளாத பி.ஆர். அம்பேத்கர் பதவி விலகினார்.<br>• பின்னர் சி.டி. தேஷ்முக், அரிப் முகமது போன்ற அமைச்சர்கள் கருத்து வேறுபாடு காரணமாகப் பதவி விலகினர்! | • The advice of the resigned Cabinet will not bind the President in any way!<br>• What does collective responsibility mean? Collective responsibility means being bound by the decisions taken by the Cabinet. Ministers may have differences of opinion during Cabinet discussions. They may express these differences of opinion. However, once the Cabinet has made a decision after the discussion, the ministers must unconditionally accept that decision.<br><br>• It is essential to keep these differences of opinion confidential. Not only that, they must wholeheartedly support the Cabinet decisions both inside and outside Parliament. This support must be expressed and reflected in their conduct and statements.<br><br>• If a minister disagrees with a Cabinet decision even after it has been made, he or she must resign from their position. While in office, they should not criticize, oppose, or express dissenting opinions regarding Cabinet decisions.<br><br>• In 1953, B.R. Ambedkar resigned after disagreeing with the cabinet committee's decision regarding the Hindu Code Bill.<br><br>• Later, ministers such as C.D. Deshmukh and Arif Mohammad also resigned due to differences of opinion! |
| அமைச்சரவை அமைப்பு<br>மூவகை அமைச்சர்கள்<br>1. அமைச்சரவைக் குழு அமைச்சர்கள் (Cabinet Minister)<br>2. இராஜாங்க அமைச்சர்கள் (Ministers of State),<br>3. இணை அமைச்சர்கள் (Deputy Ministers).<br><br>• தரவரிசை, அரசியல் முக்கியத்துவம், ஊதியம் மற்றும் சலுகைகள் இம்மூவகை அமைச்சர்களுக் கிடையேயான வேறுபாட்டைக் காட்டுவதாக உள்ளன. | Cabinet Structure<br>Three types of Ministers<br>1. Cabinet Ministers<br>2. Ministers of State<br>3. Deputy Ministers<br><br>• Rank, political importance, salary, and privileges distinguish these three types of ministers. |

| மத்திய அமைச்சரவை | The Union Cabinet |
|---|---|
| மத்திய அமைச்சரவை<br>• இந்திய அரசியலமைப்பு சரத்து 74-ன் படி குடியரசுத் தலைவருக்கு உதவி செய்யவும். ஆலோசனை வழங்கவும், பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஓர் அமைச்சர்கள் குழு இருக்கும்.<br>• அரசியலமைப்பு சரத்து 75-ன் படி குடியரசுத் தலைவரால் பிரதமர் நியமிக்கப்படுகிறார். பிரதமரின் ஆலோசனையின் பேரில் மற்ற அமைச்சர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்.<br>• சில சமயங்களில் பாராளுமன்ற உறுப்பினராய் இல்லாதவர் கூட அமைச்சராக நியமிக்கப்படலாம். ஆனால் அவர் பதவியேற்ற 6 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் ஏதேனும் ஓர் அவைக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.<br>• ஒட்டு மொத்த மக்களவை உறுப்பினர்களில் 15 சதவீதம் மட்டுமே அமைச்சரவை உறுப்பினர்களாக (பிரதம அமைச்சர் உட்பட) இருத்தல் வேண்டும். (2003-ம் ஆண்டு 91-வது சட்டத்திருத்தத்தின்படி)<br>• குடியரசுத் தலைவர் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் இந்த அமைச்சர்கள் குழுவின் ஆலோசனையின் படி நடந்து கொள்வார்.<br>• குடியரசுத் தலைவரின் விருப்பம் உள்ளவரை அமைச்சர்கள் பதவியில் இருப்பர்.<br>• குடியரசுத்தலைவரின் விருப்பத்தின் பெயரிலேயே அமைச்சர்கள் நியமனம் என்று கூறப்பட்டாலும் நடைமுறையில் அவர்கள் பிரதமராலேயே தேர்வு செய்யப்படுகின்றனர்.<br>• பிரதமரால் பரிந்துரைக்கப்படாத யாரையும் குடியரசுத் தலைவர் அமைச்சராக நியமனம் செய்ய முடியாது.<br>• இந்திய அரசியலமைப்பின்படி அமைச்சர்கள் தனியாகவும், கூட்டாகவும் மக்களவைக்கு பொறுப்பானவர்கள்.<br>• கூட்டுப்பொறுப்பு என்றால் அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் அமைச்சரவையின் அனைத்து அமைச்சர்களும் கூட்டாக பொறுப்பானவர்களாகின்றனர் என்று பொருள். | The Union Cabinet<br>• According to Article 74 of the Indian Constitution, there shall be a Council of Ministers headed by the Prime Minister to aid and advise the President.<br>• As per Article 75 of the Constitution, the Prime Minister is appointed by the President. Other ministers are appointed by the President on the advice of the Prime Minister.<br>• Sometimes, a person who is not a Member of Parliament may also be appointed as a minister. However, he must be elected to either House of Parliament within 6 months of assuming office.<br>• Only 15 percent of the total members of the Lok Sabha should be members of the Council of Ministers (including the Prime Minister). (As per the 91st Amendment Act of 2003)<br>• The President shall act in accordance with the advice of this Council of Ministers in the discharge of his functions.<br>• Ministers hold office during the pleasure of the President.<br>• Although it is stated that ministers are appointed at the pleasure of the President, in practice they are selected by the Prime Minister.<br>• The President cannot appoint anyone as a minister who is not recommended by the Prime Minister.<br>• According to the Indian Constitution, ministers are individually and collectively responsible to the Lok Sabha.<br>• Collective responsibility means that all ministers of the cabinet are jointly responsible for all the actions of the government. |

| | |
|---|---|
| • எந்தவொரு பொதுப் பிரச்சனையிலும், பொது நிகழ்விலும் அனைத்து அமைச்சர்களும் அரசின் நிலைப்பாட்டை ஒருமித்து ஆதரிக்க வேண்டும்.<br>• பிரதமர் பதவி விலகினால் ஒட்டு மொத்த அமைச்சரவையும் பதவி விலக வேண்டும்.<br>• அமைச்சர்களின் ஊதியம் மற்றும் பிற சலுகைகள் பாராளுமன்றம் இயற்றும் சட்டத்தின்படி நிர்ணயம் செய்யப்படும்.<br>• சபை உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்கும் முறை 1892-ம் ஆண்டுகவுன்சில் சட்டத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டது.<br>• குடியரசுத் தலைவருக்கு என்ன ஆலோசனை அமைச்சரவை குழுவினால் வழங்கப்பட்டது என்பதை எந்த நீதிமன்றத்திற்கும் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை.<br>• அமைச்சர்கள் குழுவில் 3 வகையான அமைச்சர்கள் இருப்பர். அவை<br><br>1. கேபினட் அமைச்சர்கள்<br>2. இராஜாங்க அமைச்சர்கள்<br>3. துணை அமைச்சர்கள் அல்லது இணை அமைச்சர்கள் | • On any public issue or event, all ministers must unanimously support the government's position.<br><br>• If the Prime Minister resigns, the entire cabinet must resign.<br><br>• The salaries and other allowances of the ministers are determined by a law enacted by Parliament.<br><br>• The system of ministers answering questions from members of the House was introduced through the Indian Councils Act of 1892.<br><br>• There is no need to inform any court what advice was given to the President by the Cabinet Committee.<br><br>• The Council of Ministers will consist of 3 types of ministers:<br><br>1. Cabinet Ministers<br>2. Ministers of State<br>3. Deputy Ministers or Associate Ministers |
| **1) கேபினட் அமைச்சர்கள் (அ) ஆட்சிக்குழு அமைச்சர்கள்**<br>• நிர்வாகத்தின் மையக் கருவை உருவாக்கும் மூத்த அமைச்சர்களின் முறைசாரா அமைப்பே கேபினட் ஆகும்.<br>• கேபினட் அரசாங்கத்தின் பாதுகாப்பு, நிதி, வெளியுறவுக் கொள்கைகள், உள்துறை ஆகியவற்றின் முக்கிய முடிவுகளை எடுக்கிறது.<br>• அரசாங்க துறைகளுக்கு கேபினட் அமைச்சர்கள் தலைமை பொறுப்பு வகிக்கின்றனர். இவர்கள் அரசின் கொள்கை முடிவுகளை வகுக்கின்றனர்.<br>• இத்தகைய அமைச்சர்கள் கேபினட் கூட்டத்தில் கலந்து கொள்ள தகுதியுடையவர்களாவர். | **1) Cabinet Ministers**<br>• The Cabinet is an informal body of senior ministers that forms the core of the executive branch.<br><br>• The Cabinet makes key decisions on the government's defense, finance, foreign policies, and home affairs.<br><br>• Cabinet ministers head government departments and formulate government policy decisions.<br><br>• These ministers are entitled to attend Cabinet meetings. |

| | |
|---|---|
| **2) இராஜாங்க அமைச்சர்கள்**<br><br>• அமைச்சரவை குழுவின் இரண்டாவது வகையினரே இராஜாங்க அமைச்சர்கள் ஆவர்.<br>• அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளுக்கு பொறுப்பு அமைச்சர்களாக செயல்படுகின்றனர். ஆனால் அழைப்பு விடுத்தால் மட்டுமே இவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும்.<br><br>**3) இணை (அ) துணை அமைச்சர்கள்**<br>• அமைச்சரவையில் மூன்றாவதாக இணை அமைச்சர்கள் உள்ளனர்.<br>• கேபினட் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளை செயலாற்றுவதில் இவர்கள் உதவி புரிகின்றனர்.<br>• இவர்கள் கேபினட் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாது.<br>• இவர்கள் தன்னிச்சையாக செயல்பட முடியாது. | **2) Ministers of State**<br><br>• Ministers of State are the second category of ministers in the council of ministers.<br>• They act as ministers in charge of the departments assigned to them, but they can attend cabinet meetings only if invited.<br><br>**3) Deputy Ministers**<br>• The third category in the council of ministers are the Deputy Ministers.<br>• They assist in carrying out the duties assigned to Cabinet Ministers and Ministers of State.<br>• They cannot attend Cabinet meetings.<br>• They cannot act independently. |
| கிட்சன் கேபினட் (அல்லது) குடும்ப அமைச்சரவை<br>• இவை **ஒரு முறைசாரா அமைப்பாகும்**. இது பிரதமர் மற்றும் பிரதமரின் நம்பிக்கைக்குரிய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட செல்வாக்கு உடைய நபர்களை கொண்ட ஒரு அமைப்பாகும்.<br>• இந்த அமைச்சரவையில் அமைச்சரவை உறுப்பினர்களோடு நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களும் இருப்பர்.<br>• இந்த கிட்சன் கேபினட்டால் மிக உயர்ந்த முடிவுகள் எடுக்கப்படுவதால் அமைச்சரவையின் செல்வாக்கு குறைகின்றது.<br>• கிட்சன் கேபினட் நடைமுறை அமெரிக்கா மற்றும் பிரிட்டனிலும் நடைமுறையில் உள்ளது.<br>• இந்த கிட்சன் கேபினட்டை சமயலறை அமைச்சரவை, குடும்ப அமைச்சரவை என்றும் அழைப்பர்.<br>• இந்தியாவின் ஒவ்வொரு பிரதமருக்கும் இப்படி ஒரு அமைச்சரவைக்குழு இருந்துள்ளது. | **Kitchen Cabinet (or) Family Cabinet**<br>• This is an informal body consisting of the Prime Minister and two or more influential individuals trusted by the Prime Minister.<br><br>• This cabinet includes friends and family members along with cabinet ministers.<br><br>• The influence of the formal cabinet is diminished because the most important decisions are made by this Kitchen Cabinet.<br><br>• The Kitchen Cabinet system is also prevalent in the United States and Britain.<br>• This Kitchen Cabinet is also called the kitchen cabinet or family cabinet.<br><br>• Every Prime Minister of India has had such a cabinet group. |

| | |
|---|---|
| • முக்கியமான அரசியல் பிரச்சனைகளில் முடிவு எடுப்பதில் இரகசியத்தைப் பாதுகாக்க பிரதமருக்கு இந்த அமைச்சரவை குழு முறை உதவியாய் உள்ளது. | • This cabinet group helps the Prime Minister maintain secrecy in making decisions on important political issues. |
| **<u>நிழல் அமைச்சரவை</u>**<br>• இங்கிலாந்து பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சியானது ஒவ்வொரு துறையிலும் உள்ள விவகாரங்களைப் பற்றி ஆராய தமது உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்கிறது.<br>• எதிர்க்கட்சியானது அரசு தொடர்பான பிரச்சனைகளை தெளிவாக அறிந்து கொள்ளவும், அரசினை விழிப்பாக இருக்கச் செய்யவும் இக்குழுமுறை உதவுகிறது. | Shadow Cabinet<br>• The opposition party in the British Parliament forms a committee consisting of its members to examine the affairs of each government department.<br>• This committee system helps the opposition party to clearly understand government-related issues and to keep the government accountable. |
| இந்தியாவின் தலைமை வழக்கறிஞர் (சரத்து 76) (Attorney General Of India)<br><br>• இந்தியாவின் முதல் சட்ட அதிகாரி அட்டர்னி ஜெனரல் ஆவார். இவரே இந்தியாவின் உயர்ந்த சட்ட அதிகாரி ஆவார்.<br>• இவருக்கு துணையாக சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் என்னும் சட்ட அதிகாரிகள் அரசாங்கத்தினால் நியமிக்கப்படுவார்கள்.<br>• இவர் குடியரசுத் தலைவர் விரும்பும் வரையில் பதவி வகிப்பார். இருப்பினும் அரசாங்கம் மாறும்பொழுது இவர்களும் மாறுகின்றனர்.<br>• இவர் மத்திய அரசின் முழுநேர அதிகாரி அல்லாத காரணத்தினால் இவரை அரசாங்க அதிகாரியாக கருத இயலாது இவர் சட்டத் தொழில் செய்ய மட்டுமே பயன்படுத்தப்படுவார்.<br><br><u>தகுதிகள்</u><br><br>1. இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்.<br><br>2. உச்சநீதிமன்ற நீதிபதிக்கான தகுதியை பெற்றிருக்க வேண்டும். | Attorney General of India (Article 76)<br><br>• The Attorney General is the first law officer of India. He is the highest legal officer in India.<br>• He is assisted by legal officers appointed by the government, namely the Solicitor General and Additional Solicitor Generals.<br>• He holds office during the pleasure of the President. However, they usually change when the government changes.<br>• Since he is not a full-time officer of the Central Government, he cannot be considered a government official; he is only engaged for legal practice.<br><br>**Qualifications**<br>1. Must be a citizen of India.<br><br>2. Must possess the qualifications required to be a Supreme Court judge. |

| | |
|---|---|
| 3. ஏதாவது ஒரு உயர்நீதிமன்றத்தில் 5 ஆண்டுகள் நீதிபதியாகவோ (அ) 10 வருடங்கள் வழக்கறிஞராகவோ பணியாற்றியிருக்க வேண்டும்.<br>4. சிறந்த சட்ட நிபுணராக இருக்க வேண்டும். | 3. Must have served as a judge in any High Court for 5 years or as an advocate for 10 years.<br><br>4. Must be an eminent jurist. Appointment |
| **பதவிக்காலம்**<br><br>* இந்திய அரசியலமைப்பில் (பதவி காலத்தைப் பற்றி குறிப்பிடப்படவில்லை. குடியரசுத் தலைவர் விரும்பும் வரை பணியில் நீடிக்கலாம். | **Term of Office**<br><br>* The Indian Constitution does not specify a term of office. He can remain in office at the pleasure of the President. |
| **பதவி நியமனம்**<br>* குடியரசுத் தலைவரால் பதவி நியமனம் செய்யப்படுகிறார். | **Appointment**<br>* He is appointed by the President. |
| **பதவி விலகல்**<br><br>* இவர் குடியரசுத் தலைவரால் எந்த நேரத்திலும் பதவி நீக்கம் செய்யப்படலாம்.<br><br>* குடியரசுத் தலைவரிடம் தன்னுடைய இராஜினாமா கடிதத்தினை சமர்ப்பிப்பதன் மூலம் இவர் தானாகவே பதவி விலகலாம். | **Resignation**<br><br>* He can be removed from office by the President at any time.<br><br>* He can resign voluntarily by submitting his resignation letter to the President. |
| **ஊதியம் மற்றும் படிகள்**<br><br>* இவருடைய ஊதியம் குடியரசுத் தலைவரால் நிர்ணயிக்கப்படுகிறது. | **Salary and Allowances**<br><br>* His salary is determined by the President. |
| **அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்**<br><br>1. குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்படும் விவகாரங்கள் மற்றும் இந்திய அரசுக்கு சட்ட சம்பந்தமான விசயங்களில் அறிவுரை வழங்குதல். | **Powers and Functions**<br><br>1. To advise the Indian government on legal matters and on matters referred to him by the President. |

| | |
|---|---|
| எந்த 2. இவரது கடமைகளை செயல்படுத்தும் பொருட்டு இந்தியாவில் உள்ள நீதிமன்றத்தில் வேண்டுமானாலும் இவர் ஆஜர் ஆகலாம் அல்லது பார்வையாளராக செல்லலாம். | 2. He may appear or attend as an observer in any court in India in order to discharge his duties. |
| 3. இந்திய அரசாங்கத்திற்கு எதிரான வழக்குகளில் இவர் ஆஜராகவோ அல்லது ஆலோசனை வழங்கவோ கூடாது. | 3. He should not appear or advise in cases against the Government of India. |
| 4. எந்தவொரு நிறுவனத்திலும் இயக்குனராக பொறுப்பேற்க கூடாது. | 4. He should not hold the position of a director in any company. |
| 5. இந்திய அரசியலமைப்பின் சரத்து 143-ன் குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்திடம் ஆலோசனை கேட்கும் அனைத்து விவகாரங்களிலும் இவர் கருத்தையும் கேட்டறிய வேண்டும். | 5. His opinion must be sought on all matters on which the President seeks advice from the Supreme Court under Article 143 of the Indian Constitution. |
| 6. இந்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளிலும் அரசு சார்பில் ஆஜராகுதல், | 6. To represent the government in all cases involving the Government of India. |
| 7. அரசியலமைப்பு மற்றும் பிற சட்டங்களின் மூலம் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அலுவலகப் பணிகளை ஆற்றுதல். | 7. To perform the official duties assigned to him by the Constitution and other laws. |
| 8. பாராளுமன்றத்தின் எந்தவொரு அவையிலும் பேசவோ அல்லது நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவோ உரிமை பெற்றவர் ஆவார். ஆனால் அங்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது (சரத்து 85) .<br>9. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டான அனைத்து சிறப்பு உரிமைகளையும், சலுகைகளையும் பெற இவருக்கு உரிமையுண்டு. (சரத்து 105)] | 8. He has the right to speak in or participate in the proceedings of either House of Parliament, but he does not have the right to vote (Article 85).<br>9. He is entitled to all the privileges and immunities of a Member of Parliament (Article 105). |